496

உ

சிவமயம்.



# பால்வண்ணர்

# சிவபதக் கும்மி.

---

சாத்தூர்த் தாலூகா,

ஏழாயிரம். பண்ணையிலிருக்கும்

மக-ா-ா-ஸ்ரீ

புதுமாலய்ய நாடாரவர்கள்

குமாரர்

**சிவத்தக் கருப்பய்யா**

அவர்களாலியற்றியதை

அப்பணம் பட்டியிலிருக்கும்

மக-ா-ா-ஸ்ரீ

**ப. ல. அண்ணாமலைப்பண்டாரம்**

அவர்களால்

சாத்தூர் சுப்பிரமணிய விலாசம் பிரஸில்,
பதிப்பிக்கப் பெற்றது.

---

**1923.**

விலை அணா 2.

5-JAN 1924

031, 85x. N23
224787

உ

சிவமயம்.



# பால்வண்ணர்

# சிவபதக்கும்மி.

சாத்தூர்த் தாலூகா,

ஏழாயிரம் பண்ணையிலிருக்கும்

மகா-ா-ா-ஸ்ரீ

புதுமாலய்ய நாடாரவர்கள்

குமாரர்

**சிவத்தக் கருப்பய்யா**

அவர்களாலியற்றியதை

அப்பனம் பட்டியிலிருக்கும்

மகா-ா-ா-ஸ்ரீ

**ப. ல. அண்ணாமலைப்பண்டாரம்**

அவர்களால்

சாத்தூர் சுப்பிரமணிய விலாசம் பிரஸில்,

பதிப்பிக்கப் பெற்றது.

1923.

புக் 1000. விலை அணா 2.

உ

சிவமயம்.



விநாயகர் பேரில்.

# திருப்புகழ்ச் சந்தக்கவி.

திருவழகங்கைப்பதிதனில மருஞ்சிவமாது
திகழ்மடிதவழும் மகவெனமறையுந்தினமோதும்
பருமணிகிரணப்பசி நிரமோலி தலைமேலும்
பவளவாய் விரியுஞ்செவிகுழைகொம்பே பலகாலும்
வொருயிரு யிருகர மொளிதிகழ் புகரும்வுயர்தோளும்
வுரைபெரு வபுறயலொளுகென வூறும்முளர்தாளும்
செருசகதளமலற்பதமென மொழிவரேசிருகண்ணே
சினவுறுசெயல்தவிர்சோதிவிநாயக தீங்கொழிப்பண்ணே

தூங்கா ரெட்டிய பட்டியிலிருக்கும்

இராமுரெட்டியாரவர்கள்

குமாரர்

சுந்தரரெட்டியாரவர்களியற்றியது.

பூசுரர்கள் வேதப்பொருள் மணக்கும்
பூங்குழல்தோய் மாமலர்கள் புவிநனைக்கும்
பாசுரர்களந்தரத்தில் மகிழ்ச்சியோடு
மாதரினை நடம்புரியப் பாடச்சொல்லி
ஈசுரனைத்தோத்தரித்து வீணை மீட்டி
இங்கிதமாகச் சிவத்தக் கருப்பய்யா சொல்
பாசுரமாம் பால்வண்ணர் கும்மி மெச்சிப்
பாக்கியவான் யோக்யனெனப்பகர்ந்தார் மாதோ

ஏழாயிரப்பண்ணை மக-ா-ா-ஸ்ரீ அரிகரபுத்ரநாடாரவர்கள்
குமாரர் சோசிய வித்வநூலுணர்ந்த

☞ இராயய்யாநாடாரவர்களியற்றியது

பதிபெருகுமெயில் நகரந்தன்னில் மிக்கோன்
பால்வண்ணர் சிவபதவியடைந்த கும்மி

நதிபெருகி வழந்துயருந்திருவைப்போல
நற்செல்வங் கொடுத்து தவநலமாயூக

மதிபெருகக் கற்றவர்கள் மனத்தாற்ப்பார்க்க
மாட்சிமையாத்தானிருக்க மகிளுண்டாக

அதிபெருகுமலரிருந்தாளருளாற் சொல்லி
சுகஞ்சிவத்தக்கருப்பய்யா சுகம்பெற்றானே.

ஏழாயிரம் பண்ணையிலிருக்கும்
மக-ா-ா-ஸ்ரீ ரூ சங்கரலிங்கநாடாரவர்கள்
குமாரர்

☞ வன்னியநாடாரவர்களியற்றியது

பொன்னாளுக்காசனம் வெண்பூவாளுக்
கோர்மாடம் புகழ்வான் மாது

அன்னாளுக்கோர்வீடாமவனியம்மைக்கோர்
திலக மழகைப் பூண்டு

யென்னாளும் [illegible]பெருகும் யேழாயிரம்
பண்ணையெ[illegible] நகரில் மிக்கோன்

தென்னார்பால் வண்ணமன்னன் சிவபதவிக்
கும்மி சொன்னான் திருப்பெற்றானே.

உ

சிவமயம்.

# பால்வண்ணர் சிவபதக்கும்மி.

திருச்சிறந்த யேழாயிரம் பண்ணை தன்னில்
செல்வீ சிவகாமியம்மை யருளினாலே
பொருட் சிறந்த மாரியப்ப பூமானுக்குப்
புத்திரனாய்வந் துதித்த புயல்நேற்கையான்
தெருட்சிறந்த பாலுவண்ணச் செல்வச்சீமான்
சிவபதவிபெற்ற கும்மிதெளிவாய்ச் சொல்ல
அருட் சிறந்த வொருகோடு முறித்தம்பாக்கி
அசுரர்புயமழுத்தின ஐங்கரன் காப்பாமே.

## பால்வண்ணர் சிவபதக்கும்மி

### சரஸ்பதி துதி.

வண்டாரும் பூங்குழல் வாணிசரஸ்பதி
வாக்கில்ப் பிரசன்ன மாகிவந்து
தொண்டன் பாலுவண்ணத் தோன்றல் பெருமையைச்
சொல்ல யெனக்கு வரமருள்வாய்

### சுப்ரமண்யர் துதி.

கிரவுஞ்ச மாமலையூடுருவச் செய்த
செம்பீர் சுயம்பிராறு புயத்தாய்
வீரத-மகுத்துவப் பாலுவண்ணேந்திரன்
மிக்கன் கவியை விழங்க வைப்பாய்

### கடவுள் துதி.

அருவுருவாகி யகண்ட வெளியாகி
யகிலமுமாகி யடங்கி நின்று

செரியுமூவர்பதஞ் செனற் பானு வண்ணச்
சீமான் சரித்திரம் செப்புகிறே ன்

## பெரியோர் துதி.

செங்கோல் புரிந்திடும் ராசபவுசுள்ள
சீமான் பானுவண்ணக்கோமான் மேல்
மங்காத செல்வம் யென்வாக்கால் வழந்திட
மதியோரே சொல்ல வரந்தரு வீர்

## புராணிகர் வணங்கல்.

சொல்லிய சொற்களிற் சோர்விருந்தாலுங்கள்
துல்லிப மெல்லிதச் சொற்பிள்ளைக்கு
நல்ல முத்தந்தந்து கொஞ்சுவிதம் போல
நன்றென்றெனையும் புகள் வீரே

தெய்வங்களாலயந்தன்னைத் தெரிசித்துச்
சேமலாபஞ்செயல் சேரவென்று
பொய்யிடைவாணி நவமிபூர்வபக்ஷசப்
பூரணநாளிற் புகன்றே னே

## முதல் கதை வரலாறு

சீரணி கொண்டிடும் பழனிமலைச் சார்பில்
சேர்ந்திடும் போடிக் கிராமத்திலே
கூரணியான குணசாமி அப்பயருங்
கோதற்ற ரத்ன மணியராளும் 1

புத்திரரில்லா வருத்தத்திற்காக வோ
புங்கமான தலம் போகவென்றே
அத்தருவஞ் சொல்ல யென்னால் முடியாது
ஆறுமுகந்தலம் போவதற்கு 2

போடி நகர்விட்டுக் கால்நடையாகப்
பிரையாணமாக வெளியேரி
தேடிச்செந்தூர் வடிவேலைத் தெரிசிக்கத்
தென்றிசை நோக்கி நடந்தார்கள் 3

தேனி—பாண்டிபட்டி செய்தூள்பேரையூரும்
சிவகாசிதாசில் நகர் கடந்து
இனிதான ஆறுகடந்து கங்கை நக
ரேகிச்செல்வி தல மெய்தினரே 4

எய்தியிருவருந்தானம் பண்ணச் சென்று
யெல்லாக்கிரிகை செய்தே முடித்து
மைதவள் கண்ணியாஞ் செல்விகணேசனை
வந்து வணங்கி யிருந்தார்கள் 5

இருந்து சற்றேயிளைப்பாரி வெளியேரி
ஏழாயிரம் பண்ணைக் கேகிடவே
திருந்து நகரத்துச் செட்டிகள் கட்டிட்ட
தெப்பஞ்சிகரமுங் கண்டார்கள் 6

## பத்திரகாளியம்மனாலயம் வருதல்.

கண்டங்கிருந்துமே காலசந்தி நீக்கிக்
காலைக்கடன் முறைதான் முடித்து
பண்டுஜென்னனத்துப் பாவமும் போக்கிடும்
பத்திரகாளி பதிசேர்ந்தார் 7

## பூவெடுக்க நந்தவனம் புகுதல்.

அருமையான தாயைக்கண்ட உடனந்த
அய்யரும் நற்றினத்தைப் பார்த்து
உருமையாய் யுத்தமி பாதந் தொழுதிட
வோ—மலர்வேணுமென உரைத்தார் 8

சாந்தகுண முள்ள தாயாம் பராசத்தி
தாளைப்பணிய மலரெடுக்க
வேந்தர் குலாதிப பால்வண்ண பூபதி
மிக்கனந்த வனம் போய்ச்சேர்ந்தார் 9

## ஆலயஞ்சுத்தி பார்த்தல்.

நந்தவனத்துள்ளே தான்புகுந்து வங்கே
நாலுதிசையு நடந்தேகி
விந்தையர்ன சித்திரவேலை செய்திட்ட
மிக்க யிடங்களைப் பார்க்கலுற்றார் 10

கோவிற் சதுக்கமும் மண்டபத்தின்பணி
கோதறச் செய்த கொடுங் கை களும்
பாலி நிரமும் மெதுவ [illegible] வழிக்கிடும்
பட்டிகையேரி யிருந் [illegible] கள் 11

## ரத்னமணியம்மாள் பர்த்தாவைக் கூறல்.

கணமான கட்டிடக் காட்சிப்பெருமையைக்
கண்ணுலழந்த சந்தோச மதால்
குணசாமியய்யரை ரத்ன மணியம்மாள்
கும்பிட்டொரு மொழி கூறலுற்றாள் 12

தங்கந் தளங்க நவரத்ன மின்னிடத்
தன்னிலுள்ளாலயந் தானுயர்ந்து
எங்கும் புகள்பெற வேந்திய சிம்மத்தை
இன்னொரு சிங்க மெதித்து நிற்க 13

புண்ணியவோங்கும் புகள் பெருந்தர்மத்தில்
புதிதா விசேஷம் பொருந்தினதால்
கண்ணியமானதோ ராச ராசாக்களோ
கட்டிட்டதுவுஞ் ஜமீந்தாரோ 14

நல்லோரைக் காண்பது நன்றே நலமிக்க
நல்லோர் குணங்களுரைப்பதுவும்
எல்லா நன்றே நன்று யென்று அவ்வை மொழி
எல்லாவுமக்குத் தெரிந்ததுவே 51

புண்ணியவாழனைப் போற்றிடப் போற்றிடப்
புங்கமான புண்யம் மெத்த வென
எண்ணி யெனதுள்ளந்தன்னில் நினைப்பதால்
இன்றுணிவனென் றெடுத்துரைப்பீர் 16

## ஞானசாமியய்யர் சொல்லல்

தேடருமாமணிச் சீதை நிகற்றிடுந்
தேன்மெ[illegible]யே யெந்தன் ரற்றினமே
பேடு பிரிய[illegible] அன்றிலைப்போலவும்
பிரியா மதனு[illegible]தியோலும் 17

இணைபிரியாமல் யிருந்த யிவர்கட்கு
எழில்பெற்ற பாலியஞ் சேர்பருவம்
துணைவி துணைவன் சுகங்கள் சுகிக்கயில்
தோன்றல் லொருமணி தோன்றினதே 18

செல்வமழ விட்டுச் சொல்ல முடியாது
சீமான் கோடீஸ்பரஞ் செய்கைகளில்
நல்ல மனத் தன் நடத்தும் பெருமையன்
நாடுஞ் சிவபதஞ் சென்றனே 19

அழுதுபுலம்பியடையுந் துயருட
னாராப்பெருகிய கண்ணீரும்
பெழுதமுடியாது எண்ணமுடியாது
பெச மாட்டி பட்டிடு மேக்கமுமே 20

லக்கந்தெழிந்து சிலாக்கியம் பெருகிட
ஏலப்பசங்கிரியா னவனும்

பாக்கப்பத்து லக்ஷங் கோடி பெருமான
பட்டிகை மண்டபம் பாங்கனுக்கே 21

செய்து முடித்தாளே சிமாட்டியானவள்
தேவர்மதித்திடச் செய்தாளடி
மைதவளுங்கண்ணி மாங்குயிலே ரற்ன
மாமணியே யென்று தானுரைத்தார் 22

## ரற்னமணி தெரியும்படி சொல்லக் கூறல்

வேதங்களோதிய சாதியில்த் தோன்றினீர்
வேதாந்தம் பேசிய வித்தகனே
நாதன் சிவபதஞ் சென்றுல[illegible]னில்
நாயகியார்கள் நடத்து வரே[illegible] 23

## ரற்னம் மயங்கிச் [illegible]கட்டல்.

புருஷனிருந்து பெண்டீர்களிரந்தபின்
புவியிற் பெண்டிருக்குக் கட்டிவைப்பார்
அரிதான காரியமாக வுரைத்தது
ஆச்சரியமாகத் தோண்கிரதே 24

மண்டபங்கோவில் மடங்கிணர் ணந்தனம்
மகிமை சீரந்த கணேசர் முதல்
தெண்டிரை சூழுமுலகினிலிப்படிச்
செய்து முடித்தவள் கண்டதில்லை 25

புருஷன் பொருள் வைத்துப் போனாலோ பெண்கள்
புதைத்துப்பலவிதம் போக்கடிப்பார்
தருமத்திரத்தில் மனதைச் செலுத்தின
தாயிந்தக்காலத்திற் கண்டதில்லை 26

உலகோருரைத்திடுந் தாய் தாய் யெனுந்தய்யல்
உத்தமியாது வொருத்தி யல்லோ

தலைமையாக யிந்தத்தாயையுந் தாயாகச்
சாற்று முலகு தனியாக 27

நினைக்க நினைக்கச் சந்தோஷந் திரளுதே
நேசமான யெந்தன் பத்தாவே
பனைக்குள்ளிரக்கி வடிக்குமதுவைப் போல்
பாகம் பலதேனும் போலிருக்கே 28

யாவரால்க் கட்டிய மண்டப மென்று நான்
அடியாளுங்கேட்ட அடமொழிக்கி
யேவனோ னாயகன் விண்ணடைந்தா னென்றீர்
யேதடி யாள்க்குந் தெரியவில்லை 29

தள்ளையும் பிள்ளையிருக்கு தென்று சொன்னீர்
சங்கதி யொன்றுந் தெரியவில்லை
சொள்ளையான சொல்லிருக்கவுங் கூடாது
சோம்பனுமக்குத் தடராமல் 30

செப்பிய ஆடவன் சிர்பிரவிமுதல்
சேணடைய வந்த சிக்கதுவும்
அப்பியமாது தரும நடத்தின
தாதியந்த மெல்லா னறிய 31

யாரவன் வம்மிசம் பேரூர் பிரவியும்
ஆய்குண் மாதை யரிவதற்குப்
பேரூரரியவும் னந்தவனப்பெட்டும்
பேருலயம் வகை சொல்லு மென்றாள் 32

## ஐயர் சொல்ல ஆரம்பித்தல்

சொல்லவு வேணுமோர் மாதரசி யெந்தன்
தோகையே—ரற்ன மணியாளே
நல்லரிவாக நீ கேட்கு மகிட்சியால்
நாவினாற் சொல்கிறேன் கேழடி நீ 33

## பால்வண்ண ராசா பிறப்பும்

### யெவ்வன்ன பருவங்கூறல்

மன்னர்கள் போற்றிடு மேழாயிரம்பண்ணை
மாநகர் தன்னில்மகிட்சிபெருந்
தென்னர்குலச் சத்திரிய நாடாரெனுஞ்
சீமான்கள் தன்னிற்றிசமை யுள்ளான் 34

குட்டநாடார்வழிக் கோத்திரத் தானவன்
கூரியபேர்மாரியப் பேந்திரன்
பட்டம்பெற்ற துரை ராச ராசாக்கள்போலப்
பவுசிகள் மேலாய்ப் படைத்தவண்டி 35

கொடையில் நிகற்றிடுங் கர்ணவு தாரனுங்
கொடையில் நிகர்க்க முடியாது
கடையின் வணிகம் நடத்தும் பெருமைக்கு
கையாழு மாயிரங்காணு தே 36

வங்காளஞ் சிங்கப்புதூர் சென்னபட்டணம்
மலையாளம் மெல்லாமிவன் வணிகம்
சிங்காரமாக நடத்தும் பெருக்கத்தை
தேவராலுஞ் சொல்லத்தானரி தே 37

இத்தகை யாகிய மாரியப்பேந்திரற்கு
யீரிருமக்களாந் தங்களிலே
புத்திமான் சீமான் புனிதஞ் சிறந்தவன்
புண்ணியன் பால்வண்ணன் வந்துதித்தான் 38

பிரந்து கிடந்து பிரண்டு பெழுந்தே
பிணங்கித் தவள்ந்து பின்னே யிருந்தும்
சிரந்து நடந்து திரிந்து விளையாடித்
தேடிப்பிள்ளைகளைத் தேடுவதும் 39

பள்ளிக்கூடத்திற் படித்துப்பழகியே
பலசாஸ்த்ர மெல்லாங் கற்றேயுணர்ந்து
தெள்ளிய நூல் முறை கற்றுணர்ந்த செய்தி
செப்பவு மென்றால் முடியாதே 40

வாலவயசுள்ள சிலனும்பால்வண்ணா
மன்னன்வழாவே வாள்க்கை யெல்லாஞ்
சாலவுமாக வபுரவீதின் புகள்
சாற்றவுமென்றால் முடியாதே 41

அழகில்மதனற்கு மொப்பானோனிவன்
யாவரும் பார்க்கவ லங்காரன்
களபமணிந்த புயத்தழகன்தன்னைக்
கண்டு சிரந்திடக் கண்ணழன் 42

மாதர்மயங்கும் வடிவுடையாந்தனி
வள்ளல் தியங்குங் கொடையுடையான்
சீதழமான குளிர்ந்த வழகினுஞ்
செய்ய செந்தாமரை போல் முகத்தான் 43

சந்திரன் சூரியன் போலொளி தங்கிய
சாலச்செவியிற்ற ரிப்பணிந்தோன்
இந்திரந்தேகத்திற் கண்ணிமைத்தாலென
இசைந்திடு ரற்னப்பணிப்புயத்தோன் 44

முத்தின் முதிர்ச்சி தெளிந்தெடுத்துக்கோர்த்த
முத்திமைத்தாலெனப் பல்லொளியோன்
பத்துவிரல் நகத்தின் பிரகாசத்தைப்
பார்க்க வலங்காரந்தோனுமடி 45

நல்லவழர்ந்து நெரிந்து சுருண்டுமே
நல்லமுடிந்த குடும்பியுள்ளோன்

மெல்லென வந்துமே யிந்திர நீலத்தை
விந்தையாவெட்டும் போல் மூக்குடையான் 46

விசையன ழகுக்கு வக்கால மிவன்
மேதினி தன்னிலே யிக்காலம்
ரிசபநடையை நிகராகச் சொல்லவே
நேருவரிசை நடையுடையான் 47

புருவங்கள் ரெண்டும் பொருந்திய வாளெனப்
பொங்கமான நெத்திப் பொட்டுடையான்
அருமையானமலை ரெண்டுக்கு மத்தியி
லானகமுகு வெனக்களுத்தான் 48

முதுகும் வயருஞ் சுளியென் வுந்தியும்
முதிர்ந்த தொடை முளங்காலடியும்
எதுவுமே லச்சண சாஸ்த்திரஞ் சொற்படி
எல்லாமிவனுக்கிசைந்ததுவே 49

வீட்டை விட்டு வெளியேரித்தனியாக
வீதிவழியில் நடைக்கையிலே
நாட்டீகமான வழகிற் சிரந்தவன்
தனை தன்னைப்பார்த்து நடப்பானே 50

முக்குணந்தன்னி லுயர்ந்த குணங்களில்
முதறிவுள்ளவன் முற்குணத்தான்
இக்குநிகர் மொழிமாத ரெதிர்வர
யேரிட்டும் பாராதிடை பிரிவான் 51

கண்டுமகிழ்ந்தாரோ தாய்தந்தை மார்களுங்
கண்கொள்ளாக் காச்சிக்குடையானை
பெண்டுகள் கண்டு மயங்கிடுஞ் செய்கையைப்
பேசவுமென்னால் முடியாதே 52

அருவுருவாகிய மாரனை மேலாம்
அழகிற்சிறந்தவனென் றுரைப்பார்
தெரியாவறிவினிலிவனையே பாராத
செய்கை யென்றே மிகச்செப்பிடலாம் 53

சித்திரம் வாய்ந்திடுரூபஞ் சிறந்திட்ட
சிங்காரப் பால்வண்ணச்சீமானுக்கு
சொத்திரம் பெற்றிடு தங்கை தாய்மார்களுஞ்
சொல்லாதே கல்யாணப்பேச்சைத்தார் 54

கல்யாணஞ் செய்திடப் பெண்பார்க்கவேணுமே
காரிகையே யெந்தன் கண்ணழகே
சலியாமற் சொல்லுவாய் பெண்ணதைச்செய்யலாந்
சந்தோசமாகவே சாற்றிடென்றான் 55

## பெண் வீடு மனவி கூறல்.

அந்தவுரை தனைக்கேட்டவுடனேயே
ஆகாசந்தோசஞ் சந்தோசமென்று
சிந்தை மகிழொடு கல்யாணஞ்செய்திடச்
சிவகாசியிற் பெண்ணிருக்குதென்றாள் 56

சிவகாசிதன்னிலே பெண் வீடடையாளஞ்
செப்புகிறேன் சொல்லக்கேளு மென்றாள்
தவம்போன்ற தந்தையாம் மாரியப்பேந்திரன்
தய்யலைப்பார்த்துடன் றுரைப்பான் 57

பாத்ரமறிந்து பிச்சையிடல் போலவே
பாங்கான கோத்திரம் பார்க்கவேணும்
கோத்திரம் வீடு வழியினந்தங்களைக்
கூறடிரஞ்சிதக் கோமழமே 58

சாரந் தெரியவே சொல்லுகிறோங்கேளுந்
தருமத்துரையே யென் பத்தாவே

பாரம் பணை பணக்காரராய் வாள்க்கையர்
பாரோர் மதிப்பிலும் மேன்மையுள்ளோர் 59

சிவகாசியூரிலே சீமான் ராசாக்களில்
செண்பகக்குட்டிமால் சேகரத்தான்
அவனை யெடுத்துவுரைக்கிறேன் கேளுங்க
ளாசைக்கிசைந்திடும் பத்தாவே 60

பட்டித்தெருவினிற் கெட்டியான தீரன்
பவுசும் பெருமையும் பாங்குடையான்
வெட்டித்தனமான செய்கை யில்லாதவன்
வீரபராக்ரமம் மெச்சவுள்ளான் 61

மேன்பாடுடையவர் ராஜா ஜமீந்தார்கள்
மெச்சுஞ் சினேகித மேன்மையுள்ளான்
தான்சொன்ன பேச்சினையுண்மை நிறைத்திடுஞ்
சத்தியவான் மெத்தவுத்தமனே 62

இத்தலந்தன்னிலே யிப்படிப்பேர் பெற்ற
தெங்கும்மதிப்பிலுமேற்ற முள்ளான்
உத்தமன் பேரையுரைக்கிறேன் கேளுங்கள்
வோதியவாருமுகேந்திரனே 63

ஆருமுகவீரதீர சூரன் பெரும்
அரண்மனை தன்னிலவன் மகளும்
பேருங்கருப்பம்மா ளொன்றொரு பூங்கொடி
பெண்ணிலழகு மிக்கான வளே 64

அன்னம் போல நடை தானடப்பாளவள்
அலங்காரமான வடிவுடையாள்
கன்னரசம் போல வார்த்தையுரைப்பவள்
காரியகாரணக் கண் காட்சாள் 56

புத்தியில் மெத்தச்சிறந்தவளே யவள்
புண்ணியத்தன்மை மிகவரிவாள்
வித்தகமான விநோதக்குணங்களில்
மேன்மை விழங்கு மிளங்கிள்ளை யாள் 69

கருத்து நெறிந்து சுருண்டு நீண்ட குழல்
கட்டிமுடித்த பூக்காச்சியுள்ளாள்
சிருத்தயிடைவள் செய்யதனத்தவள்
திரள்கலைச்சந்திரன் போல் முகத்தாள் 67

அழகிற் சிறந்திடும் பெண்ணங்கிருக்கிது
ஆண்டவனே யெந்தன் பத்தாவே
கிழமையு நல்லது பார்த்தந்தப்பெண்ணினைக்
கேள்க்கப்போய் வாருமெனவுரைத்தாள் 68

## பெண் கேட்கப்போகுதல்.

நல்லது யென்றுமே மாரியப்பேந்திரன்
நல்ல நாளிற் சிவகாசி சென்று
வல்லபராகிய யாருமூ கேந்திர
மைத்துனன் விடுவந்தே யடைந்தான் 69

வந்திடுமைத்துனன் தன்னையே பார்த்தந்த
வள்ளலாறுமுக மன்னனவன்
இந்திரற்கெய்தா அமுதெனப் போசனம்
இட்டருந்திப் பின்னிருக் கையிலே 70

மாரியப்பேந்திரன் மைத்துனனைப்பார்த்து
மன்னவனென் மகன் பால்வண்ணற்கு
காரியல் கூந்தல் கருப்பாயி நாச்சியாரைக்
கலியாணஞ் செய்யக்கருதி வந்தேன் 71

கலியாணஞ் செய்யப் பெண்வேணுமென்று வந்து
காரணச்சந்தோஷந்தானுரைத்தீர்

பொலிவான பூங்குழலென்மகள் தன்னையும்
பொருந்து ராசிசரிதானோவென்றான் 72

## பந்தலலங்காரங் கூறல்.

நிச்சயம் பேசிக்கலியாணஞ் செய்திட
நேரான நல்ல முகூர்த்தம் வைத்து
அச்சுதனுஞ் சிவனுமருள் முன்னிட்டு
அலங்கார வீடலங்காரஞ் செய்தார் 73

தோரணம் வாழை கரும்பு மூங்கிலோடு
சோக்கா வமைத்திடும் பந்தலிலே
மாரநிகரான மாப்பிள்ளை பெண்ணுக்கும்
மணஞ்செய் மணவறை தானமைத்தார் 74

## மணக்கோலத்துடன் மாப்பிள்ளை வருதல்.

மணஞ்செய்ய நாழிகை வந்ததெனச் சொல்ல
மாப்பிள்ளை தோழர் மகிழ்ந்து வந்து
கணமான சோதிப் பிரகாசந் தங்கிய
கல்லிட்டவாபரண மணிந்தார் 75

முத்துச்சரப்பளி ரத்னப் பதைக்கமும்
மோகனமாலை மொடுகுகளும்
பத்துவிதமான ரத்னக்கணையாழி
பாங்காவிரலிலுந் தானணிந்தார் 76

சந்திரனிவனையு மொப்பிடுங்காலையில்
சந்திரனுக்கோர் கழங்கமுண்டு
இந்திரனிவனையு மொப்பிடுங்காலையில்
இந்திரனுக்கிமை நாட்டமில்லை 77

மன்மதனிவனையு மொப்பிடுங்காலையில்
மன்மதனுக்கே வடிவமில்லை

நன்னயமான வலங்காரத்துக்கிணை
நாவினுற் சொல்ல முடியாதே 78

மேழதாள வாத்தியதம் பட்டம் வாங்கால்
விரசி முழங்கப் பல்லாக் கோ
ஆழழகந் திருத்தாமரை மாமுகன்
அலங்காரப் பந்தலிரங்கிருந் தான் 79

## பெண்மணக்கோல மணவறை வருதல்

பெண்ணினைத்தன்னை யலங்காரஞ் செய்திட்ட
பெருமை மிகுந்த விதமதனை
வொண்ணினை வொண்ணினைச் சொல்ல முடியாது
வொக்க யெடுத்து வுரைத்திடு வேன் 80

பாதாதி கேசம் வரையினிற் பெண்ணுக்கு
பற்பல ரத்னப் பணிகளெல்லாம்
சிதா வலங்காரஞ் செய்தது போலவே
செய்தார்கள் பெண்ணெணுந் தேன்மொழிக்கே 81

பெண்ணினைப் பய்யவளைத்துவந்து வந்தப்
போரான மணவறை தன்னதிலே
கண்ணினைப் போன்றவ்வழகு பொருந்திய
கட்டழகனுடன் கூடவைத்தார் 82

## குருக்கமூற்றுலி கட்டல்

வேதகராகிய பாரூர்க் குருக்களும்
வேந்தர் முறைச் சடங்கான தெல்லாம்
வோதி முடித்துமே யக்கினி சாட்சியாய்
வுயர் பெருந்தாலி கழுத்தி லிட்டார் 83

## சிவகாசி வீதிபவனி வருதல்

துந்துமி-சங்குடன் வாத்தியம் முழங்கிடத்
தூயபல்லக் கிலுந்தானேரி

செந்திருவாளுஞ் சிவகாசி வீதியிற்
சென்று வலம் வந்திரங்கினரே 84

## பெண்ணைக்கொண்டு ஏழாயிரம் பண்ணை சேரல்.

ஊர்கோலம் வந்து முடித்தனரே யப்போ
வுற்ற குருக்களும் போயினரே
ஏர் பெருமாப்பிள்ளை பெண் தன்னைக் கூட்டியே
ஏழாயிரம் பண்ணைக் கேகினரே 85

வந்துயிருக்கையில் மாரியப்பேந்திரன்
மக்களை வெவ்வேருத்தான் பிரித்து
நிந்தனை சொல்ல முடியாத மோட்சத்தில்
நேரும் பதவிக்குத்தான் பிரிந்தான் 86

தனியாகப் பாகத்தைக் கைக்கொண்ட பால்வண்ணர்
தய்யலாந் தேவியாள் தன்னுடனே
இனிதாகயின் பஞ்சுகித்து மகிழொடு
இணைபிரியா மலிருந்தார்கள் 87

## அரண்மனை கட்டிக் குடியிருந்தல்

வந்திடு யோகத்தை வாழ்க்கைப் பெருக்கத்தை
வாயினுற் சொல்ல முடியாது
இந்திரன் தங்குமரண்மனை போலவே
இவனொரு வீடு கட்டயிருந்தான் 88

தந்தைக்கதிக நூறுபங்கு கூடின
சம்பத்தின் மேலுமதிக முள்ளான்
யெந்தவிதமான சொத்துக்கள் கூடினும்
யிரோரு வாண்டு குழந்தையில்லை 89

வழும் பெருந்தானந் தருமஞ் செய்தாவர்
மங்கை கெவுரி விரத மிட்டார்
அழகிற் சிரந்ததோர் சூரியப் பிரகாசம்போல்
ஆண்பிள்ளை தான் பெற்றுத் தானெடுத்தார் 90

பெத்தகுழந்தையை மெத்தப்பிரியமாய்
பேரான வாசையுடன் வழத்து
வித்தைகள் கற்றிடப்பள்ளிக்கூடத்தினில்
விரும்பிச்சிருவன் படிக்கையிலே 91

ஊரிலஞாய மெடுத்துரைப்பான் கோவிற்
குற்ற தருமகர்த்தாவு மிவன்
யாருமிவனை நியாதிபதி யென்று
நடந்து வருகிற நாளையிலே 92

**ஊரில் கட்டுப்பாடுக்கேசி வந்தது.**

சங்கதி யொன்றுமே கட்டுப்பாடாகவே
தாக்கினாரே பதினேழுபேரை
அங்கியிற் பட்டமெழுகைப் போலோடியே
ஆழுக்கொருதிசை போய் மறைந்தார் 93

திட்டத்திடமெனக் கட்டுப்பாடாகவே
செய்யாக்கொலைக்கேசி வந்ததினால்
பட்ட துயரமுமூரார் படுங்கஸ்டம்
பாட்டையுஞ் சொல்ல முடியாதே 94

போலீசார்கண்டு பிடித்தா லடிப்பார்கள்
பொருக்கமாட்டோ மெனவோடிவந்து
சாலவே வந்து பதினேழு புள்ளிகள்
சற்கார்சயில்தனில் வந்தடைந்தார் 95

அடைந்தவர் தங்களைக்கோடு கச்சேரிக்கு
அலைந்தந்தப்பாலு வண்ணேந்திரனும்
நிடமுடனீதிபுரி கலெக்கட்டரால்
செயில் விடக்கேசி விலக்கினரே 96

ஆருபுள்ளி பேரிற் கேசியிருக்கிதே
அய்யோவென்று மனங்கலங்கி

தேருதலை சொல்ல ஆள்த்துணையில்லாமல்
திரேகத்திலே சுரஞ் சேர்ந்ததுவே 97

முரணானகாச்சலும் மண்டையடிமே
முக்கியமா யணல்ப் பொங்கினதால்
வரமான[illegible]வொடு சுத்தகுணங்களும்
வோதிடும் பேச்சி வொழிந்ததுவே 98

பேச்சொடு மூச்சுஞ்சுரத்தொடுகாச்சலும்
பேதித்துத் தொந்திப்புத்தானாகி
தாச்சிமையான சிலேப்பினங் கண்டிப்புத்
தான்வந்து மிக்கத்தனு[illegible]பாச்சே 99

## பால் வண்ணர் சிவபதஞ்சேரல்.

சூத்திபிருந்திடும் பெண்டீருமைந்தனுஞ்
சுற்றத்தார் தன்னோடுஞ் சூள்ந்திருக்க
பத்திநெறியுள்ள பரமபதத்திற்குப்
பால்வண்ண பூபதிதானடைந்தான் 100

## மனவியழுதல்.

மட்டுக்கடங்காத வாள்க்கை நிரம்பிய
மன்னவன் பாலய்யா மாண்டவுடன்
கட்டுற்ற பூங்குழல்க்கன்னி மனவியாள்
கதரியழுதைக்கேழடி னீ 101

அய்யய்யோவென்று வலரிவிழுந்தாளே
அடியற்று வீழும்மரம் போலே
குய்யோகூகூவெனக்கு மிரியழுதுதன்
கூந்தல் தரையிற் புரண்டழுதாள் 102

சந்திரனீடு வுமக்குச்சரியாமோ
தருமத்துரையே யெனக்கதரி

எந்தன் மனது கலங்க வைத்துப்போனீர்
யீடேற்றமாவனோ யென்றழுதாள் 103

வயற்றிலறைந்து யிருந்தழுவாள் மனம்
வாடி மருண்டு மயங்கிடுவாள்
அயற்றுவரிவுகுலைந்து தரையினில்
ஆற்றைப்போல்க் கண்ணீரலம் பழுதாள் 104

செகத்தினிச்சாமியைக்காணக்கிடைக்குமோ
தேரிமன தோடிருக்க வென்று
முகத்திலே கையாலடித்தழுதாளுடன்
மூச்சத்தவள் போலேதான் கிடந்தாள் 105

பெண்டுகள் போலே சுகத்தோடிருக்கவும்
பேராசைப்பட்டிட்ட பாதகிக்கு
சண்டாளத் துரோகி போலாக்கினீரோ யென்னை
சாமி யென் சாமி யெனவழுதாள் 106

கொஞ்சவயதென்றும் பார்த்திராயென்னைக்
கூட்டிக்கொண்டு கூடப்போனீரா
தஞ்சமாக வொன்னை நம்பியிருந்ததைச்
சற்று நினைக்கலை யென்றழுதாள் 107

கண்டோர்முகங்களைப் பார்த்தழுதாள் பின்னுங்
கய்யாலே கண்ணிலடித்தழுதாள்
பண்டு பத்தா சொன்ன சொல்லினைச்சொல்லியே
பரிதாகம் போலபதைத்தழுதாள் 108

செத்தவள்போல கிடப்பாளே யாருந்
தேற்றவுயிர் வந்து தானழுதாள்
உத்தனுயால் நினைந்து நினைந்துமே
வுடையாளிவை நொந்து தானழுதாள் 109

ஈடுவுரைத்திட வென்சாமிக்கேயிணை
ராசாக்கள் தன்னிலுந்தானுமில்லை
யேடவிழ்ந்த யிதழ்மலர்மார்பாவென்
றெண்ணிப்பலவாயிசைத்தழுதாள் 110

அன்றிலும் பேடும் பிரியாவிதம்போல
ஆதியிற் கைதொட்டநாள் முதலாய்
வொன்றினுக்கொன்று பிரியாதிருந்ததை
யுற்றதுயரால் நினைந்தழுதாள் 111

பஞ்சவர்னச்சேலை பட்டுத்தினுசொடு
பாங்கா வுடுத்தப்பவுசிருந்தும்
விஞ்சவே வெள்ளைப்புடவை யுடுத்திட
விதித்தானுடையாழி யென்றழுதாள் 112

சாமிதாயா நித்திராசேனீயில்லாமல்
சண்டாழி பாவி தனியாகப்
பூமியிலே கொஞ்ச நாளைக்களித்திடப்
பொருந்துமோ யென்மனமென்றழுதாள் 113

சித்தமிரங்குவீரென் கண்ணோக்கம் பார்ப்பீர்
சீமானே ராசசேகபூமா
உத்தமமானவடியாளழுதிட
வொன்றுமுரைக்கலை யென்றழுதாள் 114

பத்திரங்கஸ்தாவேசி நோட்டுவுங்கள் பேர்
பாங்குடன் சொல்லியழைக்கிறதே
உத்தரஞ் சொல்லாமல் வாயை மூடிவிட்டீர்
வோசைகோ மோசஞ் செய்தீரென்றழுதாள் 115

கல்லுவயிரம் பதைக்கஞ்சரமணி
கையாலெடுத்தென்கழுத்தி விட்டீர்

மெல்லியர் கூடியழுது கழட்டிட
விட்டுமேசாமி யென்றேயழுதாள் 116

வில்வெட்டுச்சோக்கா ரவிக்கை மூக்குத்தியும்
விந்தையான நத்துப்பில்லாக்கும்
கல்லிட்டிழைத்த மணிவிரல் மோதிரங்
கழட்ட நாள் வந்ததே யென்றழுதாள் 117

இடையினி லொட்டியாணந் தண்டை பாதசரம்
யேனுமயிர் மாட்டி யெச்சரமும்
வுடையொன்று மாற்றியே யெல்லா நகைகளை
யுரிய நாள் வந்ததே யென்றழுதாள் 108

மஞ்சி நிரமான கூந்தலிற் சூடிய
மல்லிகை பிச்சி ரோசா மலரும்
கெஞ்சியணிந்திடச்செய்தீரேயினிக்
கேவலமானனே யென்றழுதாள் 109

பத்து லச்சங்கோடி பாக்கிய முண்டுள்ள
பாட்டனாராண்டிடு ராச்சியத்தை
இத்தரை தன்னிலிருந்து நீராளாமல்
இந்திரநகர் போனீரென்றழுதாள் 110

கரியதடங்கண்ணி கண்ணீருகச் சிந்திக்
கதறியழுது கலங்கினதை
விரிவாகச் சொல்லி யெடுத்துரைக்கவென்றால்
வேதனாற் சொல்ல முடியாதே 111

மைந்தனழுதவை கூரல்.

பல்லுவிழுந்து முளையாச்சிறுவனும்
பாலகனான புதல்வனுமே
சொல்லியழுத துயரினைச்சொல்கிறேன்
தோகையே றத்னமணியாளே 122

என்னையே விட்டுப்பிரிந்தாயோ யினி
யேவரெனக்கு யினிதோடு
சொன்னதை யெல்லாங் கொடுத்துப் பிரியமாத்
தோளிலே வைத்துச்சுமப்பாரோ 123

அய்யய்யோ தெய்வமே யிப்பவுநான் தந்தை
யற்ற பிள்ளையாகிப் போனேனே
தெய்வமே தெய்வமே அய்யாவுக்கென்மேலே
சிந்தனை யெங்கே யென்றே யழுதான் 124

எந்தன்மேற் சிந்தனை யெப்போதிருக்குமே
யெங்கே வைத்துப்போனீரய்யாவே
தந்தையைக்காண்பது மெந்தக்காலமென்று
தரையில் விழுந்து புரண்டழுதான் 125

கல்லுங் கரையுமே சொல்லிழுதது
கண்டோர்மன துங்கலங்கினதே
யெல்லையில்லாத துயரால் மகன் சொல்லி
யேங்கித்தியங்கி மிகவழுதான் 126

இந்த வயதினித்தந்தையில்லாமலே
யென்னவொழுங்கு நடத்திடுவேன்
கொந்தலர் பூங்குழலன்னையா லெவ்விதங்
கூட்டக்குறைக்க முடியாதே 127

பரிதாகமாகவழுதது யரிளைப்
பார்த்தவர் கேட்டவர் தானழுதார்
விரிவா யெடுத்துவுரைக்க வென்றாலது
மிக்கதுயரம் முடியாதே 128

## ரெண்டு சொக்காரழுதது.

சொக்காரனாகிப வள்ளி முத்தாமவன்
சொந்தக்கணக்குச் சுதந்தரத்தான்

மிக்கான தம்பியாம் ஆறுமுகனிரு
பேர்களழுததை விள்ளுகிறேன் 129

சொல்லச்சரியென நம்பிக்கை கொண்டீரே
துரையே ராசசுகுணரே
யெல்லையில்லாத பகிட்சியுமின் புமும்
யெய்தியிருந்தமே யென்றழுதார் 130

தரையிற்கிடந்து புரண்டழுதாரவர்
தங்கள் கையால் முகந்தானரைந்தார்
துரையேசாமி யென்று சொல்லியழுததைச்
சொல்லி யென்னாலு முடியாதே 131

## தமையன் தம்பி தமைக்கை தங்கை யழுதல்

அண்ணனிருவருந் தம்பியொருவனும்
அய்யோவென் றலறி வந்து
மண்ணதில் முட்டித் தரையிற்புரண்டுமே
வாயிலே கையாலடித்தழுதார் 132

வொன்னைக் கொடுத்துவுயிரோடிருக்கவும்
உடையாளி செய்திடுமோளிதுவோ
முன்ன முறையாக நாங்களிருவரும்
முந்திச் சாகவேணுமென்றழுதார் 133

எங்கட்குச் சாவுவராமலிருக்கையில்
யென்ன குறைச்சலா யீயிரந்தாய்
தங்கப்பூமேனியே தம்பி தம்பி யென்று
தலையிலே கையாலடித் தழுதார் 134

வாயிலே கையாலடித்தழுதாரவர்
மண்ணிலே முட்டிப்புரண்டழுதார்
காயுமெரியணற்பட்ட மெழுகுபோல்
கதரியழுதார்கள் மூவருமே 135

தமையனுந் தம்பியுந் தங்கச்சிமாரோடு
தனிக்கத் தனிக்கயிருந்து கொண்டு
யெமை யெல்லாங் காப்பாற்ற நீ யென்றிருந்தது
யெண்ணின யெண்ணம் போச்சென்றழுதார் 136

## ஊராரழுதல் கூறல்.

கத்தியழுதாரே யண்ணந் தம்பியுடன்
கண்ணினை யென்னுந் தமைக்கை தங்கை
பித்துக்கலங்கி யிவர்களழுததைப்
பிரமனாலுஞ் சொல்லத்தானரிதே 137

ஊருமடங்கலுங் கூடியழுதாரே
வுற்ற பந்து சனந்தானழுதார்
வாரணி பூங்குழல்மாதர் மிகுதியாய்
வந்தவர் துக்கமதித்தழுதார் 338

செப்படி வித்தைபோற் காட்டி மறைத்திட்டுத்
தீரன்பதவி யடைந்தவுடன்
இப்படியாகச்சனங்களழுததை
யாராலுஞ் சொல்ல முடியாதே 139

பூந்தேருச் சப்பரஞ் சட்டிப் பாலப்பனைப்
பொங்க முடன் தூக்கி வைக்கயிலே
சாந்த குணமுள்ள யிஷ்டமான சனந்
தங்கள் வாய் கண்ணி லடித்தழுதார் 140

இவனைப் போல் நீதிதயாள குணத்தவன்
யெங்கெங்கும் பார்க்க முடியாது
சிவனைத் தியானம் புரிந்த பாலப்பனைத்
தேரோடு தூக்கி நடந்தார்கள் 141

தேரிலே தூக்கி நடக்கையிலே யந்தத்
தெருவிற் புரண்டழுங் கோடிசனம்

ஆர்ய குலத்திலுதித்த பசுங்கிளி
அன்னமே யின்ன முங்கேளடி நீ 142

### தேரின் பின்னால் சனங்களழுதல்

சாக வயது வுனக்கு வரலாமோ
தருமக் களஞ்சியம் நீயல்லவோ
போகவுனக்கு மனசுவந்தாலோ
போக்கெங்கே யெங்கட்கு யென்றழுதார் 143

தலையிலடித்து வழுதார் சிலர் சிலர்
தங்கள் வயற்றிலடித்தழுதார்
உலையில் மெழுகுவுரிகினதைப் போல
வோடித்தரையிற் புரண்டழுதார் 144

முட்டியழுதிடுங் கோடான கோடியே
முச்சற்றுப் போகுங் கோடான கோடி
தட்டி யெழுப்பியே யுயிர்வரச்செய்து
சனங்களை யெண்ண முடியாதே 145

224787

### சமாதி செய்யல்.

தேருந்தெருவைக் கடந்து நந்தவனத்
தென்புரம் மேலக்கரை தனிலே
யாரும் நடந்திடு ரோட்டுக்குக் கீள்புரம்
நல்லசமாதி நவித்தாரே 146

சம்மாதியில் வைத்தடக்கஞ் செய்தவுடன்
தங்கள் தங்கள் வீடுதான் சேர்ந்தார்
அம்மாதிரித்துக்கமெல்லாங் கழிந்த பின்
ஆக்குஞ்செயலை யுரைகிறேன் கேள் 147

### நாயகனுக்கு ஆலயங் கட்டல்.

புருசனிறந்திட்ட நாள் முதலாகவே
போஜனம் நல்லாப்புசித்தறியாள்

தரிசனஞ்செய்து சமாதியைச் சுத்தி
சரியான பூசை சமர்த்துவளே 148

என்ன மனந்தனிலெண்ணுகின்றாளவள்
யீசன் செயலாய்ப் பொருளிருந்தும்
நன்னயமானதோர் வீடெனக் காச்சுது
நாயகனுக்குமே காடேச்செ 149

பூமானுக்கல்லவோ பொங்கொளி மண்டபம்
பொருந்தியிருந்தால் புகழாகுந்
நாமளிருப்பது நன்றன்றெனச்சொல்லி
நங்கையுமண்டபம் நாட்டிடவே 150

## ஆலயங் கட்டல்

மண்டபங் கோவிலும் நால்கால்ச் சவுக்கையும்
மாசற்ற மாமணித் திண்ணைகளும்
கண்ட கண்ட வண்டிமாடு மருந்திடக்
கல்லினாற் தொட்டிப்புனற் பெருக்கும் 151

பூசை செய் மண்டபம் வீபூதிப்பொக்கிசம்
புகர் புகப் பூட்கையோடைங்கரத்தான்
நேசமதாகவே வீற்றிருக்கச் செய்த
நேயத்தை யாவரெடுத்துரைப்பார் 152

பாவமகற்றிடுந் தீர்த்த நவமெனப்
பரிந்து முழுகும் படித்துறையும்
கூவத்தழகினை யாவரும் நாவினாற்
கூசாமல்ச் சொல்லமுடியாதே 153

விந்தையதாகிய னந்தவனத்தினில்
வேணமலர்கள் விகசிதமாய்
சிந்தை தெளிவது போல மகிட்சியைச்
செப்ப வென்னாலு முடியாதே 154

மாங்கனி வாழைப் பலாக்கொய்யா மாதுளை
வஞ்சியே ரத்ன மணியாளே
தேங்கொடு புன்னையுமாரஞ்சி வில்பமும்
தித்திக்கு நவ்வல்ச் செரிகமுகும் 155

வால வயசுள்ள பத்தினி மாதவள்
மங்கைக்கரசு மனம் போலே
சோலையிதுவென வானத்தழாவிய
சோக்காச் சவுக்குஞ் சுரந்ததுவே 156

சுவர்க்க உலகத்தைச் சேர்ந்த தன்வேந்தனை
தொல்லுல கிற்றுந்து திப்பதற்கு
எவற்குந் தெரியுமே மாது சிரோன்மணி
இது கட்ட யெண்ணிடு மெத்தனமே 157

லக்ஷசக் கணக்கான பொன்னை யெடுத்தவள்
நாதன் பால்வண்ணன் சமாதி தன்னை
மிச்சவலங்காரஞ் சொர்னத்தளுத்தினள்
விந்தையிலும் புகள் மேன்மையுள்ளாள் 158

கணவனுக்காலயங்கட்ட நினைப்பதுங்
கட்டி முடிக்கக்கன பொருளை
மணக்கோலம்போல முடிக்க நினைத்தவள்
மானிலந்தன்னிலுங் கண்டதில்லை 156

இவளே உலகிற்குத் தாயாகு மிவள்
யேற்றிடுங் கற்பிலுயர்ந்தவளே
தவள நிரத்துப் புடவை தரித்தவள்
சாலும் பெருமைக்குத் தாயிளே 160

பத்தினினாச்சியாள் பால்வண்ணர் தேவியாள்
பதியிற் சிரந்த பதிவிரதை

உத்தமி மாதவள்போல நடந்தவர்
உம்பர் பதவியடைவாரே 161.

யென்றுமே சொல்லியே ஆலயந்தான்விட்டு
யிருவருனந்த வனம்புகுந்து
வொன்று மிதழ்கள் விரிந்து விகசித
முற்றமலரினைத் தானெடுத்தார் 162

தெய்வமாம் பத்திரகாளி தன்னாலயஞ்
சென்று நின்றற்சனை தான்புரிந்து
மைதவள் கண்ணியுங் குணசாமியய்ய,நம்
வாவென்று செந்தூர்ப் பதியடைந்தார் 163

கவி.

குணசாமியப்ப ரத்ன மணியம்மாளும்
குகன்வாளுஞ் செந்தூரிற்ப் போயபின்னர்

கணமான மீனினொடு சிப்பிவாழுங்
கடலதிலே மூள்கியாலயத்துட் சென்று

பணமான அரவணியுமீசன் மைந்தன்
பன்னிருகை வேலவனைப் பரிவோடேத்தி

மணமான தாளைமிக வழரும்போடி
மானகரிற் போய்ச்சேர்ந்து மகிழுற்றாரே

முற்றிற்று